பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

மார்ச் 2014 ❁ விலை ரூ. 15/-



சின்னப்பழநி முருகன்

சேலம் மாவட்டம்

# திருத்தணிகைமலை முருகனைத் துதித்துப் பாடினால் காலன் (யமன்) மற்றும் காலம் பயம் இல்லை

வாழ்வென்பது, பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே விளையாடப்படுகிற சடுகுடு விளையாட்டா? சுவாசப் பைக்கும் காற்று மண்டலத்துக்கும் இடையேயான வர்த்தகத் தொடர்பா? அல்லது ஓட்டைச் சட்டிக்குள் நிகழ்த்தும் வேடிக்கை விளையாட்டா?

ஒரு கேள்வியின் மேல் இன்னொரு கேள்வியை வைத்ததுதான் மிச்சம். விடைகண்டவர்கள் மனிதர்களாகிய நாம் இல்லை. ஞானிகள்தான். தன்னுடைய சுவாசத்தை உள் அடக்கி, குகசாயுச்ய நிலைக்கு வந்து அருஉருவமாக நம்மிடையே இருந்து கொண்டு, நம்மைக் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடல்களின் விளக்கத்தை – ஒரு தமிழ் அறிஞர் மூலம் அந்தப் பாடலுக்கு விளக்கம் அளிக்கிறார் என்பதை என்னுடைய ஆசிரியர் முனைவர் ப.இராமன் அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்.

நிரந்தரமற்றது வாழ்க்கை; ஆனால் நான் தான் நிரந்தர அரசன் என்று இறுமாப்பு கொண்டு அலைந்தவர் எத்தனைபேர்? வெற்றியும் தோல்வியும் ஆண்டவன் சித்தம், விலைமதிப்பற்ற உடல் செய்து, அதை நம்மிடத்தில் கொடுத்தனுப்பினான் இறைவன். நாமோ, கிரக பலன் பார்த்தும், கண்ட உணவுகளை உண்டும், இந்த உடம்பை மருத்துவரிடம் ஒப்படைக்கிறோம். உடலைப் பாதுகாக்கும் அறிவோ ஆர்வமோ, நம்மிடம் ஏன் இல்லாமல் போனது? குட்டிச் சுவருக்குள் யார் குடியேறுவர்? சிந்தியுங்கள். உடல் எனும் அற்புத மாளிகையை நாம் குட்டிச்சுவராக்கிக் கொண்டால், உயிராகிய இறைவன் எப்படி வந்து அதில் தங்குவான்? என்னுடல் சிதைந்து போனதற்கு நான் காரணமல்ல, நோய்தான் காரணம் என்றால் நோய் வருவதற்கு யார் காரணம்? ஊசி இடம் தராமல் நூல் நுழையுமா? அளவான உணவு, அளவான போகம், அளவான தூக்கம், முறையான மூச்சுப் பயிற்சி இருந்தால் நம்மை நோய் மட்டுமல்ல யமதர்மனே கூட நெருங்கிட அஞ்சுவான்.



**சாகாமல் இருப்பதற்குக் கல்வியுண்டு**
**சாக்காடு கொள்வதற்கும் விவரமுண்டு**

சாவதும் வாழ்வதும் நம்மால்தான் என்னும் திருமூலரின் பாடலைப் படித்துப் பார்த்தால் மரணத்தையும் வெல்லும் ஆற்றல் நமக்கு உண்டு என்ற நம்பிக்கையைப் பெறலாம். உடலைக் காக்கும் உபாயம் அறிவோம். பிறகு சிவனை வெளியில் தேடிச் செல்ல வேண்டாம். நமக்குள்ளேயே இருப்பார் – ஜீவனாக!

ஆறுமுகத்தோனின் அறுபடை வீடுகளுள் திருத்தணிகை மலையும் ஒன்று. என்பதை அறிவோம். இது முருகப் பெருமான் சூரசம்ஹாரம் முடித்து, சினம் தணிந்து அமைதியுடன் அன்பர்களுக்கு அருள் வழங்கும் இடமாகப் போற்றப்படுகிறது. அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் ஆடற்காட்சி அருளினார் என்பதை அருணகிரியார் 'தணிகைமலைதனில் மயிலில் நித்தத்தில் நிற்கவல பெருமாளே!' என்று பாடிய வரிகளால் அறியலாம். இத்தகைய சிறப்பு பெற்ற திருத்தணிகை வேலனைப் போற்றி நமது பாம்பன் சுவாமிகள் திருத்தணிகைப் பதிகம் பாடியுள்ளார். இதில் ஆறு பாடல்கள் உள்ளன. சுவாமிகள்


**சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்**
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
**Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526**


அறுமுகன் திருவருளால் தம் திருநாவில் 'கங்கையைச் சடையிற் பரித்து,' என்னும் மங்கலத் தொடருடன் தொடங்கி நூறு பாடல்கள் பாடியுள்ளார். இது சுவாமிகளின் இளமைப் பருவத்தில் பாடப்பட்டதாகும். 'பாடியே அறியா எளியேன் வாய்ப்பாடல் உன் கிருபை எனவும் நினைத்தேன்' என்று சுவாமிகள் கூறுவதால் செந்தமிழ்க்கடவுளின் திருவருளால் பாடப்பெற்றது என்பது விளங்கும்.

**பஞ்சை என எண்ணியோ பரிபாகம்**
**எய்தாத**
**பண்பு அதனை எண்ணியோ நீ**

பாராமுகம் செய்வதாய் எண்ணுவேன் அப்பனே

**பக்ஷம் எப்படியும் வேண்டும்**

என்ற வரிகள் வறியவர்களையும், இறைவனை அடையும் பக்குவம் தெரியாதவர்களையும் நீ ஏற்று அருள் செய்ய வேண்டும் என்பது உள்ளத்தை உருக்குவதாகப் பாடப் பெற்றதாகும். ஐந்தாம் பாடலில் பன்னிரண்டு இராசிகளையும் அழகாக அமைத்துப் பாடுகிறார்.

மேலும் சுவாமிகள் இரண்டாம் மண்டலத்தில் முதற் கண்டத்தில் 51ஆவது பதிகமாக, திருத்தணிகைமலைப் பதிகத்தை இயற்றியுள்ளார்கள். இப்பதிகம் பண், பஞ்சமம் மற்றும் அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தமாகவும் இலக்கண இலக்கிய நயத்துடனும் அருளிச் செய்தது ஆகும்.

**காலன் பயன் எவ்வாறு போகும்?**

நாம் மனிதர்களாகப் பிறந்திருக்கின்றோம். நமக்கு இறப்பு என்பது நிச்சயம். இது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் நாம் பிறந்த நாள் முதல் இறக்கும் காலம் வரை நம்மில், பலர், இறக்காமல் இருக்க முடியுமா? என்ற உன்னத நிலையை சிந்திக்க மறந்ததுதான் நாம் செய்த மிகப் பெருந்தவறு. நம்மைப் போன்று மனிதர்களாகப் பிறந்த சிலர் மட்டும் எப்படி இறவாமல் இருக்கும் நெறியைக் கண்டுபிடித்தார்கள்? அதில் பல ஞானிகள் இருக்கின்றனர். திருமூலர், ஸ்ரீஇராகவேந்திர சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், அருணகிரிநாதர் மற்றும் வள்ளல் பெருமான், இப்படி எத்தனையோ ஞானிகள். இந்த வகையில் மனிதனாகப் பிறந்து, ஞானியாக மாறி, மங்கள மூர்த்தியான மயூரநாதப் பெருமானைப் பாடும் பணியே பணியாய் ஏற்று அப்பரமன் அருளாலே 6666 பாமாலைகள், சாத்திர தோத்திர ஆராய்ச்சி நூல்கள் இயற்றியருளியவர், அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார்.

சிறுகுழந்தை முதற்கொண்டு நமக்குப் பாலூட்டிய தாய் நல்ல தரமான உணவு அளித்து இந்த உடலை வளர்த்தாள், தந்தையோ பொருள் ஈட்டும் கலையைக் கற்றுக் கொடுத்தார், ஆசிரியரோ அறிவு வளரக் கல்வி புகட்டினார். நாம் கல்வி கற்றவுடன், பொருள் ஈட்டும் ஆசையில் காலம் கழித்தோம். காலம் கழிந்த நிலையில் காலன் நம்மை இப்பூலகில் இருந்து எடுத்துச் செல்வதற்கு வசதியாக எதையெல்லாம் உண்ணவேண்டும் என்று தெரிந்து கொள்ளாமல், உடல் கெட்டுப் போக வேண்டிய உணவினை உண்டு ஞானம் என்ற சிந்தனையைப் பெற மறந்ததால் காலன் (யமன்) நம்மை மிக எளிதாகக் கொண்டு செல்லப் பாசக்கயிறு போல நோயினை நாம் பற்றுகின்றோம். மிகப் பெரிய நோயைப் பெற்றதால் யமனுக்கு அதிக வேலை கொடுக்காமல் அவன் இழுத்த நொடியிலே இந்த உடல் மண்ணுக்குள் மறைகிறது. இந்த மனிதன் வாழ்ந்த 60 ஆண்டுகள் என்ன செய்தான்? இயற்கையின் விதிவசத்தால் இறைவனின் ஆசியால் இந்த உடல் தாயிடம் 10 மாதம் வளர்ந்து ஓர் உருவெடுத்து பூமியில் தோன்றியது இவ்வாறு மடிவதற்காகவா?

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஓர் இடத்தில் மிக அழகான உதாரணம் கூறுகிறார். அது என்னவென்றால் ஆக்கை அளவே உன் அதிகாரம், **ஆக்கைவிடில் நமன் அழிக்கும் உன் அதிகாரம்** "இதனுடைய உட்பொருள் நாம் சிறுவயதில் நாம் நினைக்கக்கூடிய காரியங்கள் அனைத்தும் செய்யமுடியும், உதாரணமாக, மிக வேகமாக ஓடுதல், பல்வேறு வாகனங்கள் ஓட்டுதல் மற்றும் பல வேலைகள். ஆனால் வயது தளர்ந்து நோய் பற்றிக் கொள்ளும் போது நம்மால் பேசக்கூட முடியாமல் ஐந்து அறிவு உள்ள பிராணிகள் போல இருக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்த சமயத்தில் இறைவனின் திருநாமத்தைக் கூடக் கூறமுடியாமல் இருப்போம் என்பது இதன் பொருள் ஆகும்.

சுவாமிகள் அருளிய திருத்தணிகைமலைப் பதிகத்தின் சில பாடல்கள் (நீங்கள் எளிதில் படிக்குமாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது) மற்றும் விளக்கத்தை முனைவர் ப.இராமன் அவர்கள் எழுதிய உரை நூலில் ஒரு சிறுபகுதியை மட்டும் இங்கு உங்களுக்கு எடுத்து வழங்குறேன்.

**பொன் ஆரங்கள் தாங்கு கொங்கைப் பூவையர் மையலிலே**
**பல்நாளும் பட்டு ஈழைகொண்டு படுவனம் சேர்முன்னே**
**தென்ஆர் வண்டு பாடு தெய்வத் தணிகை நெடுங்கிரி வாழ்**
**மன் ஆர் ஞானச் சேய் சேம்பாதமலரை வணங்குதுமே.**

பொன் மாலைகள் அணிந்த தனங்கள் உடைய அழகிய மங்கையரின் மயக்கத்தில் பலநாளும் உழன்று ஈழை முதலிய நோய்கள் கொண்டு இடுகாடு சேர்வதற்கு முன்னே அழகிய வண்டுகள் பாடுகின்ற தெய்வத்தின் தணிகைப் பெரியமலையில் எழுந்தருளி நிலைபெற்ற ஞானக் குழந்தையின் சிவந்த திருவடிமலரை வணங்குகின்றேன்.

**கண்கள் மங்கிக் காது அடங்கிக் கருத்து மயங்கும் முனே**
**தண்கொள் பங்கயங்கள் விள்ளும் தணிகை நெடும்கிரி வாழ்**
**பண்கள் பாடு வாயன் சேயன் பனிமலர் மன் பணிகோ**
**கண்கள் ஈர்ஆறு எந்தை பாதகமலம் வணங்குதுமே.**

கண்கள் பார்வை மங்கிக் காதுகள் கேட்பது மந்தமாகி நினைவும் மயங்கும் முன்னே குளிர்ச்சியுடைய தாமரைகள் மலரும் திருத்தணிகைப் பெரிய மலையில் எழுந்தருளியுள்ள பண்கள் பாடுகின்ற திருவாயனும் சேயனும் ஆன குளிர்ந்த மலர் அரசன் வணங்கும் தலைவனும் பன்னிரண்டு கண்களுடைய எம்முடைய தந்தையும் ஆனவனின் திருவடித் தாமரை மலரை வணங்குகிறேன்.

இப்பதிகம் 365நாள்கள், (அதாவது திருத்தணி மலையில் பெருமானை தரிசிக்க 365 படிகள் உள்ளன). அவற்றில் ஏறி ஒவ்வொரு நாளும் இப்பதிகத்தை மனம் உருகிப் பாடி அந்த முருகனின் உளம் உருகினால் காலன் பயம் நம்முள் தோன்றாது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் நாம் சென்று படிக்க முடியுமா? என்பது நமது அடுத்த கேள்வி. நாம் நம் வீட்டில் இருந்து கொண்டு இந்த பண் முறைப்படி முருகனை மனத்தில் தியானித்துக் கொண்டு ஒவ்வொரு படி என்பதை நாம் நிற்கும் இடத்தில் வரைந்து கொண்டு பாடினால் நிச்சயம் முருகன் அருள்பாலிப்பான். காரணம் இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்பது நமக்குத் தெரிந்த ஒன்று. ஆகையால் நாம் வரைந்து நிற்கின்ற படியின் உள்ளும் அருஉருவமாக இருந்து அருள்பாலிப்பான் என்பதில் ஐயம் இல்லை என்பது என்னுடைய கருத்து ஆகும்.

**காலம் பயம் எவ்வாறு போகும்?**

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் தன்னுடைய அருட் தன்மையினால், **காலமோ கந்தன் கையில் உள்ளது** என்று

மிகத் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார். இதற்குச் சான்றாக சுவாமிகள் முதல் மண்டலத்தில் 12ஆம் பதிகமாக திருத்தணிகை என்ற தலைப்பில் அருளியுள்ள அந்தப் பதிகத்தை நாம் படித்தால் காலம் கந்தன் கையில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

சுவாமிகள் முதல் மண்டலத்தில் 12ஆம் பதிகமாக திருத்தணிகை என்ற பதிகத்தை அருளிச் செய்துள்ளார். இதில் ஐந்தாம் பாடலில் பன்னிரண்டு இராசிகளையும் அழகாக அமைத்துப் பாடியுள்ளார். முனைவர் ப.இராமன் ஐயா அவர்கள் நாம் படிப்பதற்கு எளிதாக வேண்டும் என்ற நோக்கத்தில் பிரித்துக் கொடுத்த அப்பாடலைக் கீழே காணலாம்.

நாள் தோறும் ஈர்ஐந்து கதலியோன் இக்கு எனும்
நாலு ஐந்தினைக் குனித்து
நடலை மலர் தூவலால் எட்டு நிகர் சடுவை நான்
நாடி மனம் மாறி நாலின்
கூடா உலர்ந்து ஏழின் நில்லாது நலிகின்ற
கோட்டாலை இரிய அருடி
கூளிகெழு நாலரையொடு அரை இருந்து அசை சூலி
கோமகள் எனத் திகழ்ந்து
வாடாத தொடர் ஆட ஓர் இரண்டு ஊர் ஒருவன்
வாமம் வதி பன்னிருகனாள்
மகிமை மலி பதினொரு முனிக்குவண் தமிழ் அருளும்
வரத ஒன்றினை உகைத்தோய்
தாள் தோணி ஆடு அலர் தூய் ஒன்று இரண்டு முனி
துதி செய்த அடிகள் அரசே
சுப்பிர மதர்ப்பு அவிர் திருத்தணிகை வெற்பில் உறை
சுப்பிரமணியப் பிரமமே.

**விளக்கம்:**

ஐந்திலமர்ந்து (சிம்மம்) பேய்க் கூட்டம் சூழச் செலுத்தும் சூலி எனும் தேவி அரசமகள் என்று விளங்கி, என்றும் வாடாத மாலைகள் அசைய இரண்டினைச் (விடை) செலுத்தும் சிவபெருமானின் இடப்பாகத்தில் உறையும் பன்னிரண்டாவது (மீன்) போன்ற கண்களையுடையவள்; பெருமை மிகுந்த பதினொன்றாவதான (கும்பன்) அகத்திய முனிவர்க்கு வளமான தமிழைக் கற்பித்தவனே! வரம் அருள்பவனே! ஒன்றாவதைச் (மேஷம்) செலுத்தியவனே! மகரந்தமும் தேனும் நிறைந்த புதிய மலர்களைக் கொண்டு அருச்சித்துக் காமத்தை வெறுத்துத் துதி செய்த யாழ் முனிவரின் அரசனே! திருத்தணிகை மலைமேல் எழுந்தருளியுள்ள ஒளியும் ஆனந்தமும் ஆகவுள்ள சுப்பிரமணியப் பரம்பொருளே! தினந்தோறும் பத்தாவதான (மகரம்) கொடியுடைய மன்மதன், ஒன்பதாவதான (தனுசு) கரும்பு என்னும் வில்லை வளைத்துத் துன்பமலர்களை என்மீது எய்வதால், எட்டாவது (விருச்சிகம்) மேல் நில்லாது நாலாவதின் (கடகம்) கூடுபோல் உடம்பு வாடி வருந்துகின்ற துன்பங்கள் ஒழியும்படி அருள்புரிவாயாக!

இந்தப் பாடலை சுவாமிகள் எனக்கு அருள் ஆசி புரிந்ததால் www.pambanswamigal.org. or pambanswamigal.net என்ற இணைய தளத்தில் சென்று பார்த்தால் உங்களுக்கு இப்பதிகத்தை எப்படி பாடவேண்டும் என்று கணினி கற்றுக் கொடுக்கும் விதமாக இந்த இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பாடலின் முனைவர் ப.இராமன் அவர்களின் விளக்க உரையுடன் கொடுக்கப்பட்டுள்ளது. இதே பாடலை தற்போது வளர்ந்துள்ள விஞ்ஞான வளர்ச்சி மூலம் கிடைக்கப் பெற்ற சாப்ட்வேர் மூலம் ஆங்கிலத்தில் – தமிழில் இருப்பது போல் அப்படியே மொழி பெயர்க்கப்பட்டு மற்ற மொழியினரும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் pambanswamigal.net என்ற இணைய தளத்திலும் சென்று காணலாம்.

**இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்:–**

பெரியவர்களாகிய நாம் நம் தாயிடம் உணவு உட்கொள்ளக் கற்றுக் கொண்டோம், நம் தந்தையிடம் பொருள் ஈட்டும் தன்மையை உணர்ந்தோம், ஆசிரியரிடம் கல்வி கற்றுக்கொண்டு அவையே போதும் என்றெண்ணி நம் வாழ்நாளில் திருத்தணி முருகனின் அருட் தன்மையை உணர்ந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். சென்ற காலம் சென்றதுதான்; திரும்பி வரப் போவதில்லை. ஆனால் நாம் நம் குழந்தைகளுக்கு இது போன்ற பாடலைக் கற்றுக் கொடுக்கும் போது, அவர்கள் புரிந்து கொள்வதற்கு ஏற்றவர்களாக பெற்றோர் உதவ வேண்டும். பலர் இவ்வாறு செய்தால் நம் குழந்தைகள் நாளைக்கு ஏன் ஒரு ஞானியாக மாறமுடியாது? அப்படி சில குழந்தைகள் ஞானியராக மாறினால் இக்கட்டுரையாளனுக்கு இதைவிட மிகப் பெரிய பரிசு இந்த உலகத்தில் எதுவும் இல்லை.

ஞானிகளாக மாறாவிட்டாலும் எதிர்கால சமுதாயம் குறையின்றி வாழத் தம்மாலியன்ற அளவுக்காவது இறையுணர்வை வளர்த்திட இன்றைய இளந்தலைமுறையினரை வளர்ப்பது பெற்றோரின் நீங்காக் கடமையாகும்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**